Pubished with the financial assistance from the Ministry of Education, Government of India.

ஹிதபாஷிணீ வெளியீடு நெ. - 3.

सप्तर्षिरामायणम्

अन्यानि रामचन्द्रस्तोत्राणि च

ஸப்தர்ஷிராமாயணம்

மற்றும்

பல

ராமசந்த்ர ஸ்தோத்ரங்கள்

தமிழ் உரையுடன்

பிரசுரித்தவர் :—
R. முத்துகிருஷ்ண சாஸ்திரி,
1835/3 மேலவீதி,
தஞ்சாவூர்.

காபிரைட்] 1967 [விலை 70 பை.

Published with the financial assistance from the Ministry of Education, Government of India.

ஹிதபாஷிணீ வெளியீடு நெ. - 3.

सप्तर्षिरामायणम्

अन्यानि रामचन्द्रस्तोत्राणि च

ஸப்தர்ஷிராமாயணம்

மற்றும்

பல

ராமசந்த்ர ஸ்தோத்ரங்கள்

தமிழ் உரையுடன்

பிரசுரித்தவர் :—
R. முத்துகிருஷ்ண சாஸ்திரி,
1835/3 மேலவீதி,
தஞ்சாவூர்.

காபிரைட்] 1967 [விலை 70 பை.

பொருளடக்கம்

		பக்கம்
1	Preface	1
2	முகவுரை	5
3	ஸப்தர்ஷிராமாயணம்	9
4	ஸ்ரீ ஸீதாராம ஸ்தோத்ரம்	16
5	ஸ்ரீ ராமசந்த்ர ஸ்துதி	22
6	ஹநூமத் பஞ்சரத்னம்	55
7	ஹநூமத் தண்டகம்	58

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
22	24	सुस्वसिन्धु	सुखसिन्धु
42	8	थ्रिता	श्रिता
44	24	गात्रषु	गात्रेषु
51	7	पावनँ	पावनं
57	15	भक्तिमाक्	भक्तिभाक्
57	19	ப^{4}க்தி	ப^{4}ாக்
58	13	स्फुरीकृत	स्फुटीकृत
61	17	ररिाघवसमर्पि तपरम्भ	राघवसमर्पितपरिरम्भ

PREFACE.

"Brahman is One" our sastras declare and continue that as and when necessity arises and there is intense hankering in millions of minds for divine interference, formless Brahman, out of Its own volition of Ananda and Grace, takes form and appears among men in various Avatars to redress their grievances and give them an ideal to live for. Among the several incarnations of Bhagawan, Sri Rama, the hero of the Epic "Ramayana" is easily the most beloved of all mortals for many reasons. For one, in his trials and tribulations, he represents the woes and anxieties of the average human being in his day-to-day affairs of life, and at the same time he rises up to the highest ideals of human living; he is thus not only a typical man, but also all things that an ideal man should be - he is Bhaghawan Sri Ramachandra. For another, his graciousness is such that even towards his enemies, provided they surrender entirely unto him, he extends his benediction and protection. Sri Ramachandra says.

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद् व्रतं मम ॥

Further, without distinction of caste, colour or kind, at various times in his career he has extended his powerful protection to a crow (Kakasura), an eagle (Jatayu), an archer (Guha), a monkey (Sugreeva) and a Rakshasa (Vibheeshana).

It is, therefore, that for thousands of years, millions of Hindus have offered their prayers and adorations to Sri Ramachandra, and have benefitted by his grace in obtaining worldly wealth and prosperity, in getting rid of their woes and afflictions, and in obtaining peace of mind.

An effort has been made in this volume to make a selection of such prayers and incantations, adorations and supplications, in the form of Sanskrit slokas (together with their Tamil rendering) culled from different sources. Some of them are highly poetical and imaginative, some of them describe the various adventures and sing the glories and ideal qualities of Sri Rama; but care in selection has been taken to so see that all of them are in fairly simple, and easy-flowing metres, that facilitate learning by heart for daily prayers.

1. Sapta Rishi Ramayanam.

Srimad Valmiki Ramayanam consists of seven Kandas, or Sections. Everyone of the Saptarishis, the Seven famous Rishis has, each of them, written one sloka giving the essence of each Kanda – thus, there are seven sloka for seven Rishis for seven Kandas of the Ramayana, and in the eighth sloka is given the benefits accruing from studying them, thus.

" Whoever reads these slokas, or hears them read, all their loads of sins will disappear. They will have all worldly wealth and prosperity, with many sons and grandsons, and after enjoying all the happiness that this world can offer, they will reach the abode of Sri Vishnu, namely, Vaikunta."

Let us, therefore, hope that everyone will not only himself read the " Sapta Rishi Ramayana " daily, but will train their children also to do likewise, and obtain all benefits, both of this world and the next.

2. Sri Sita Rama Stotram.

The author of these adorations are said to be Sri Anjaneya. In the whole of the Ramayana, Sri Anjaneya is the only one who is dignified by the title of " Vidwan ",

the learned one, Kavi Chakravarty Kamban also calls him " Sollin Selvan ", the lord of the words. So learned was he reputed.

In the first eight stanzas, the first portion is praise of Sri Ramachandra, and the latter of Sri Sita. In the ninth sloka, he says that he is blessed because he has been able to adore Sri Rama and Sita. 10, 11, and 12th slokas are " Phalasruthi ".

3. Sri Ramachandra Stuti.

This is a collection of slokas taken from the writings of such famous Sri Rama baktas, such as Sri Adi Sankara Bahagavatpadacharya's " Rama Bhujanga Stotram", Sri Ramabhadra Dikshitar's " Ramashtaprasam ", and Sri Neelakanta Dikshitar's " Raghuvira Sthavam ". Tamil translations are added, and as the text is in easy-flowing metre and rhyme, it should be easy to learn by heart.

4. Hanumath Pancha Ratnam.

This poem consists of five Slokas is praise of Sri Hanuman, and has been written by Sri Sankara Bhagavadpadacharya. It is said that those who study this poem and include this in their daily prayers will gain all desires and wealth in this world and will shine as great Rama bhaktas.

5. Hanumath Dhandakam

Sundara Kandam of Ramayana is considered the most beautiful, " Sundara ", because in this one Kanda all the essentials of a great epic are seen in their full majesty great deeds, great language and great thoughts. Scholers give many other reasons why this Kanda is called " Sundara ". But, it is undeniable and noteworthy that throughout the ages, millions of people include this Kanda in their daily parayana in the firm belief that doing so will bring them untold prosperity and happiness and solace.

Many will confirm in their own experience that this is a matter of fact. One of the important reasons for the popularity of this Kanda is that it describes in great detail the mental development and achievements of that greatest of bhaktas, Sri Hanuman. In this "Dandakam" intended for daily adoration, the glories of Sri Hanuman is narrated in a brief, but attractive, form.

Although the author of "Hanumath Dandakam" is unknown, the diction and thoughts expressed are so noble that it requires no apology to include this poem in this series.

Although the poems and songs included in this book might have severally appeared in various publications, we believe that it is for the first time that they are all brought together in one volume to gladden the hearts of all Rama bhaktas. Some years ago, a portion only was published by us. but in this edition, more worthwhile additions have been made and it is hoped that all asthikas will derive great benefit from same.

Lastly, our special thanks are due to the Sarada Vilasa Press, Kumbakonam, for printing this edition, and to the Education Department of the Government of India for the financial assistance rendered by them for this noble cause.

R. MUTHUKRISHNA SASTRI,
Editor & Publisher.

முகவுரை

இவ்வுலகில் ஸ்ரீமத் ராமாயணத்தையும், ஸ்ரீமத் ராமசந்திர மூர்த்தியையும் தழுவி பெரும்பாலும் எல்லா கவிகளும் எழுதி இருக்கின்றனர் என்று கூறலாம். அதற்குக் காரணம் ஸ்ரீராமாவதாரத்தின் தனிச் சிறப்பேயாகும். கடவுள் ஒருவர் தான் என்றாலும் அவர் பலவுருவங்களுடன் தோன்றி பலவித மனப்பான்மையுள்ளவர்களுக்கும் அருள்புரிந்து வருகின்றார் என்பது சாஸ்திரங்களின் முடிவு. இவ்விதம் தோன்றிய உருவங்களுள் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் பெருமை மிக அதிகம். விரோதியாயிருப்பினும் "தங்களைத் தவிர வேறு கதியில்லை" என்று பூர்ணமாக நம்பி அவரைச் சரணமடைந் தவர்களுக்கு பயங்கள் எல்லாம் நீங்கும். பயன்கள் எல்லாம் கிட்டும்.

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद् व्रतं मम ॥

என்பது ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் திருவாக்கு.

மேலும் ஜாதியையோ, குணங்களையோ குறைகளையோ எதையும் ஆலோசிக்காமல் அருள்புரியும் மூர்த்தி ஸ்ரீராம சந்திரன்.

काकाय कङ्काय च योदितेष्टं दाशाय कीशाय च राक्षसाय ।

காக்கை (காகாஸுரன்) கழுகு (ஜடாயு) வேடன் (குஹன்) குரங்கு (ஸுக்ரீவன்) இராக்ஷஸன் (விபீஷணன்) இவர்களுக் கெல்லாம் அருள் புரிந்திருக்கிறார்.

இவ்விதம் ஸர்வஸுலபராயும், ஸர்வோத்கிருஷ்டராயு முள்ள ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியை அனைவரும் ஸ்தோத்ரம் செய்து அவர் அருளைப் பெறுவதற்கென சில அரிய ஸம்ஸ்கிருத சுலோகங்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் இதில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் எளிய நடையில் சுலபமாக மனப்பாடம் செய்யக்கூடியவைகளாக அமைந்திருப்பதுடன் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பல குணங் களையும் ரஸமாக எடுத்துரைக்கின்றன.

1. ஸப்தரிஷி ராமாயணம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஏழு காண்டங்கள் கொண்டது. அந்த ஏழு காண்டங்களின் கருத்தை ஸப்த ரிஷிகளுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அழகிய சுலோகத்தால் வர்ணித்து விட்டு, கடைசியில் எல்லோரும் சேர்ந்து இதைப் படிப்பதால் உண்டாகும் பயன்களைப்பற்றி அடியிற்கண்டவாறு கூறியிருக்கின்றனர்.

"இந்த இனிமையான சுலோகங்களை எவர் படிக்கின்றனரோ, அல்லது கேட்கின்றனரோ அவர்களுடைய பாவக் குவியல்கள் பறக்கும். ஸர்வ ஐச்வர்யங்களுடனும் பல புத்திர பௌத்திரர்களுடனும் இவ்வுலகில் வெகுகாலம் வரை பலவித ஸுகபோகங்களை அநுபவித்து இறுதியில் தேவர்களால் எப்பொழுதும் போற்றப்படும் ஸ்ரீவிஷ்ணுவின் ஸ்தானமாகிய வைகுண்டத்தை அடைவார்கள்."

சுருக்கமாக ஸ்ரீமத்ராமாயணார்த்தத்தை அறிந்துகொள்ளவும், ராமாயண படனத்தால் பெறக்கூடிய பல பயன்களை எளிதில் அடையவும் இந்நூல் மிக்க உபயோகப்படும். அனைவரும் இதை மனப்பாடம் செய்வதுடன் தம்தம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் மனப்பாடம் செய்வித்துப் பூர்ண பயனைப் பெறவேண்டும் என்பது நமது கோரிக்கை.

2. ஸீதாராம ஸ்தோத்ரம்

இது பக்த ஆஞ்ஜநேயரால் இயற்றப்பட்டது. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் "வித்வான்" என்று ஆஞ்ஜநேயர் ஒருவர்தான் போற்றப்பட்டிருக்கிறார். கவிச் சக்ரவர்த்தி கம்பரும் "சொல்லின் செல்வன்" என அவரைக் கொண்டாடுகிறார். அவர் அருளிச் செய்த சுலோகங்களின் பெருமைகளைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ?

இந்த சுலோகங்களில் 1 முதல் 8 வரை முதற் பாகத்தால் ஸ்ரீராமனையும் இரண்டாம் பாகத்தால் ஸீதையையும் மிக இனிமையாக வர்ணித்திருக்கின்றார். 9-வது சுலோகத்தில்

"இவரை வணங்கி கிருதார்த்தனுக ஆகின்றேன்" எனக் கூறுகின்ருர். 10, 11, 12-வது சுலோகங்கள் பலச்ருதியாக அமைந்திருக்கின்றன.

3. ஸ்ரீராமசந்த்ர ஸ்துதி

ஆதி சங்கரர் அருளிச்செய்த "ராமபுஜங்கஸ்தோத்ரம்" ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதர் அருளிச் செய்த "ராமாஷ்ட ப்ராஸனம்" ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்களின் "ரகுவீர ஸ்தவம்" மற்றும் பல ராமபக்தர்களுடைய நூல்களிலிருந்தும் பல அரிய சுலோகங்கள் உரையுடன் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ ராமபிரானது அனந்த கல்யாண குணங்களை அநுஸந்தானம் செய்ய இவை மிக்க பயன்படும். பல ப்ராஸங்களுடன் கூடியிருப்பதால் கேட்பதற்கும் இவை மிக இனிமையானவை.

4. ஹநூமத் பஞ்சரத்னம்

இது ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகளவர்களால் அருளிச் செய்யப்பட்டது. ஹநூமானைப்பற்றிய ஐந்து சிறந்த சுலோகங்கள் இதில் அடங்கி இருப்பதால் இதற்கு "ஹநூமத் பஞ்சரத்னம்" என்று பெயர். இதைப் படிக்கின்றவர்கள் இவ்வுலகில் வெகுநாள்வரை ஸமஸ்த போகங்களையும் அநுபவிப்பார்கள், சிறந்த ராமபக்தர்களாகவும் விளங்குவார்கள் என வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

5. ஹநூமத் தண்டகம்

இதில் ஆஞ்சநேயருடைய மஹிமை மிக அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில் எல்லா காண்டங்களும் மிக ரஸமாகஅமைந்திருந்தாலும் சுந்தரகாண்டத்திற்கு தனிச்சிறப்பு இருப்பதால் அதற்கு "சுந்தரம்" எனப் பெயர் ஏற்பட்டிருக்கிறது எனக் கருதுவோரும் உண்டு. வேறு காரணங்களாலும் அதற்கு "சுந்தரம்" எனப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் அந்த காண்டம் ஸ்ரீராம பக்தர்களால் அதிகமாகப் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. பலர் பலவித மனோரதங்கள் பூர்த்தியாவதன்

பொருட்டு பல முறையில் அதை பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்து பயன்களையும் பெற்று வருகின்றனர் என்பது கண்கூடு. அதன் பெருமைக்குக் காரணம் அதில் ஸ்ரீ ராமபக்தரான ஆஞ்ஜநேயரது மஹிமை முக்கியமாக வர்ணிக்கப்பட்டிருப்பதும் ஒன்ருகும். அந்த மஹிமையை சுருக்கமாகவும் ரஸமாகவும் எடுத்துரைக்கிறது இந்த "தண்டகம்". இதை மனப்பாடம் செய்து பிரதிதினம் பாராயணம் செய்துவந்தால் ஸ்ரீ ஆஞ்ஜநேயருடைய அருள் நிச்சயமாகக்கிட்டும்.

இதை இயற்றியது யார் என்பது புலப்படாதபோனுலும் சொற்சுவை, பொருட்சுவை முதலியவற்றுடன் ஸ்ரீ ஆஞ்ஜநேய ப்ரபாவத்தை எடுத்துரைக்கின்றபடியால் இதையும் தமிழ் உரையுடன் இங்கு பிரசுரம் செய்துள்ளோம்.

இச்சிறு நூலில் உள்ள பல ஸ்தோத்திரங்கள் ஆங்காங்கு மற்றும் பல பகுதிகளுடன் பிரசுரம் செய்யப்பட்டிருந்தபோதி லும் ஸ்ரீராமகுணுநுபவத்திற்குரிய ஸ்தோத்ரங்களை மட்டும் பொருக்கி எடுத்து தமிழ் உரையுடன் வெளியிட்டால் அது ஸ்ரீ ராமபக்தர்களுக்கு மிக்க பயன்படும் எனக் கருதி இதை பிரசுரம் செய்திருக்கிருேம்.

சில ஆண்டுகளுக்குமுன் இதில் ஒரு பகுதியைமட்டும் வெளியிட்டிருந்தோம். அதற்கு பக்தர்களுடைய ஆதரவு அதிகமாக இருந்ததால் இன்னும் பல பகுதிகளைச் சேர்த்து பல சிறந்த மாறுதல்களுடன் இதை வெளியிட்டிருக்கிருேம். இதற்கும் ஆஸ்திகர்களது ஆதரவு பூர்ணமாக இருக்கு மென்றே நமது நம்பிக்கை

இதை நேர்த்தியாக அச்சிட்டுக்கொடுத்த கும்பகோணம் "சாரதா விலாஸ பிரஸ்" உரிமையாளருக்கும், இதை அச்சிடப் பொருளுதவி செய்துவரும் மத்திய அரசாங்க கல்வி அமைச் சகத்திற்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

R. முத்துகிருஷ்ண சாஸ்திரி.
பதிப்பாசிரியர்.

सप्तर्षिरामायणम् ॥

ஸப்தர்ஷிராமாயணம்

कश्यपः — கச்யபர் :—

जातः श्रीरघुनायको दशरथान्मुन्याश्रयात्ताटकां
हत्वा रक्षितकौशिकक्रतुवरः कृत्वाप्यहल्यां शुभाम् ।
भङ्क्त्वा रुद्रशरासनं जनकजां पाणौ गृहीत्वा ततो
जित्वाध्वात्मनि भार्गवं पुनरगात् सीतासमेतः पुरीम् ॥ 1

ஜாத: ஸ்ரீரகு4நாயகோ த3ச1ரத2ாந்
முந்யாச்1ரயாத்தாடகாம்
ஹத்வா ரக்ஷிதகௌசிகக்ருதுவர:
க்ருத்வாப்யஹல்யாம் சு1ப4ாம் ।
பங்க்த்வா ருத்3ரச்1ராஸநம்
ஜநகஜாம் பாணௌ க்3ருஹீத்வா ததோ
ஜித்வாத்3த4ாத்மநி ப4ார்க3வம்
புநரக3ாத் ஸீதாஸமேத: புரீம் ॥ 1

தசரதனுக்குப் பிள்ளையாகத் தோன்றிய ஸ்ரீராமன், விச்வாமித்ரருடன், அவருடைய யாக ரக்ஷணத்திற்காகச் செல்லுகையில் தாடகை என்ற இராட்சஸியைக் கொன்று விச்வாமித்ரரின் சிறந்த யாகத்தைக் காப்பாற்றி (பின்பு மிதிலைக்குச் செல்லுகையில்) அகல்யை என்ற கௌதமருடைய பார்யையை தனது பாத தூளியால் பரிசுத்தையாகச் செய்து, ஜனகனுல் இரக்ஷிக்கப்பட்டு வந்த பரமேச்வரனது வில்லை முறித்து, சீதையை மணந்துகொண்டு, திரும்பி அயோத்திக்கு வருகையில் நடுவழியில் பரசுராமனை ஜயித்து சீதையுடன்கூடமறுபடியும் அயோத்தி நகரத்திற்குச் சென்றூர். (1)

अत्रिः — அத்ரி :—

दास्या मन्थरया दयारहितया दुर्भेदिता कैकयी
श्रीरामप्रथमाभिषेकसमये माताप्ययाचद्वरौ ।
भर्तारं, भरतः प्रशास्तु धरणीं रामो वनं गच्छता-
दित्याकर्ण्य सचोत्तरं न हि ददौ दुःखेन मूर्च्छां गतः ॥ 2

த^3ாஸ்யா மந்த^{2}ரயா த^{3}யாரஹிதயா
து^{3}ர்பே^{4}தி^{3}தா கைகேயீ
ஸ்ரீராமப்ரத^{2}மாபி^{4}ஷேகஸமயே
மாதாப்யயாசத்^{3}வரௌ ।
ப^{4}ர்தாரம், ப^{4}ரத: ப்ரச^1ாஸ்து
த^{4}ரணீம் ராமோ வநம் க^{3}ச்ச^{2}தா
தி^{3}த்யாகர்ண்ய ஸசோத்தரம்
நஹி த^{3}தௌ^{3} து^{3}: கே^{2}ந மூர்ச^2ாம் க^{3}த: ॥

ஸ்ரீராமனுக்கு முதல்முதலாக யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய முயற்சித்தகாலத்தில் தயையற்ற மந்தரை என்ற தாஸியினல் செய்யப்பட்ட துர்போதனைகளால் மனமாற்றமடைந்த கைகேயி என்ற பிரியமான தாய்கூட அவள் கணவனான தசரதரிடம் "பரதன் பூமியை ஆளவேண்டும், இராமன் காட்டிற்குச் செல்லவேண்டும்" என்று இருவரன்களை யாசித்தாள். அதைக்கேட்ட தசரதர் எவ்வித பதிலையும் சொல்லவில்லை. தாங்கமுடியாத துக்கத்தால் மூர்ச்சையை அடைந்தார். (2)

भरद्वाजः — பரத்வாஜர் :—

श्रीरामः पितृशासनाद्वनमगात् सौमित्रिसीतान्वितो
गङ्गां प्राप्य जटां निबद्ध्य सगुहः सच्चित्रकूटे वसन् ।
कृत्वा तत्र पितृक्रियां सभरतो दत्वाऽभयं दण्डके
प्राप्यागस्त्यमुनीश्वरं तदुदितं धृत्वा धनुश्चाक्षयम् ॥ ३

ஸ்ரீராம: பித்ருசா1ஸநாத்3வநமகா3த்
ஸௌமித்ரிஸீதாந்விதோ
க3ங்கா3ம் ப்ராப்ய ஜடாம் நிப3த்3த்4ய
ஸகு3ஹ: ஸச்சித்ரகூடே வஸந் ।
க்ருத்வா தத்ர பித்ருக்ரியாம்
ஸப4ரதோ த3த்வாப4யம் த3ண்ட3கே
ப்ராப்யாக3ஸ்த்யமுநீச்வரம்
தது3தி3தம் த்4ருத்வா த4நு: சாக்ஷயம் ॥ 3

ஸ்ரீராமர் தகப்பனுருடைய கட்டளையினுல் சீதை, இலக்ஷ்மணன் இவர்களுடன் காட்டை அடைந்தார். அங்கு கங்கையை அடைந்து குஹனுடன் சேர்ந்து அவனுக்கெதிரிலேயே ஜடை தரித்துக்கொண்டு, பிறகு அங்கிருந்து சென்று அழகிய சித்ரகூட பர்வதத்தில் வசித்துக்கொண்டிருக்கையில் (அங்கு அவரை திருப்பி அழைத்துவர வேண்டுமென்ற எண்ணத்துடன் பரதன் வர, அவன்மூலம் தசரதன் மரணத்தைக்கேட்டு) பரதனுடன்கூட அவ்விடத்திலேயே தர்ப்பணம் முதலிய பித்ருகார்யங்களைச் செய்துவிட்டு, பிறகு அங்கிருந்து தண்டகாரண்யம் சென்று அங்குள்ள மஹரிஷிகளுக்கு அபயமளித்து, பிறகு அகஸ்திய முனிவரையடைந்து அவரால் உரைக்கப்பட்ட நன்மொழிகளையும் அழிவற்ற வில்லையும் பெற்றுக்கொண்டு. (3)

विश्वामित्र: — விச்வாமித்ரர் :—

गत्वा पञ्चवटीमगस्त्यवचनाद्दत्वाऽभयं मौनिनां
छित्वा शूर्पणखाऽस्यकर्णयुगलं त्रातुं समस्तान् मुनीन् ।
हत्वा तं च खरं सुवर्णहरिणं भित्वा तथा वालिनं
ताराररत्नमवैरिराज्यमकरोत् सर्वं च सुग्रीवसात् ॥ 4

க^{3}த்வா பஞ்சவடீமக^{3}ஸ்த்யவசநாத்^{3}
த^{3}த்வாऽப^{4}யம் மௌநிநாம்
சி^{2}த்வா சூ^{1}ர்பணக^{2}ாஸ்யகர்ணயுக^{3}லம்
த்ராதும் ஸமஸ்தாந் முநீந் ।
ஹத்வா தம் ச க^{2}ரம் ஸுவர்ணஹரிணம்
பி^{4}த்வா தத^{2}ா வாலிநம்
தாராரத்நமவைரிராஜ்யமகரோத்
ஸர்வம் ச ஸுக்ரீவஸாத் ॥ 4

அகஸ்தியர் கூறியபடி அங்கிருந்து பஞ்சவடிக்குச் சென்று அங்குள்ள மகரிஷிகளுக்கு அபயமளித்து சூர்ப்பணகை என்ற இராக்ஷஸியின் மூக்கையும், இரு காதுகளையும் அறுத்து, எல்லா முனிவர்களையும் இரக்ஷிப்பதற்காக கரன் என்ற இராக்ஷஸனைக் கொன்று, பொன் மானை (மாரீசனை) பிளந்து, வாலியை வதம் செய்து, தாரையையும் மற்ற ராஜ்யத்தையும் ஸுக்ரீவனுக்குச் சொந்தமாகச் செய்தார். (4)

गौतमः — கௌதமர் :—

दूतो दाशरथेः सलीलमुदधिं तीर्त्वा हनूमान् महान्
दृष्ट्वाऽशोकवने स्थितां जनकजां दत्त्वाऽङ्गुलेर्मुद्रिकाम् ।
अक्षादीनसुरान् निहत्य महतीं लङ्कां च दग्ध्वा पुनः
श्रीरामं च समेत्य देव जननी दृष्टा मयेत्यब्रवीत् ॥ 5

தூ^{3}தோ த^{3}ாச^{1}ரதே^{2}: ஸலீலமுத^{3}தி^{4}ம்
தீர்த்வா ஹநூமாந் மஹாந்
த்^{3}ருஷ்ட்வாऽசோ^{1}கவநே ஸ்தி^{2}தாம்
ஜநகஜாம் த^{3}த்வாங்கு^{3}லேர் முத்^{3}ரிகாம் ।

அக்ஷாதீ3 நஸுராந்நிஹத்ய மஹதீம்
லங்காம் ச த3க்3த்4வா புந:
ஸ்ரீராமம் ச ஸமேத்ய தே3வ ஜநநீ
த்3ருஷ்டா மயேத்யப்3ரவீத் ॥ 5

ஸ்ரீ ராமருடைய சிறந்த தூதனுன ஹனுமாந் ஸமுத்ரத்தை அநாயாஸமாகத் தாண்டி, இலங்கைக்குச் சென்று, அங்கு அசோகவநத்தில் வீற்றிருந்த சீதையைக் கண்டு, அவளிடம் மோதிரத்தைக் கொடுத்து, அக்ஷன் முதலிய இராக்ஷஸர்களைக் கொன்று, விசாலமான இலங்கையையும் கொளுத்தி, மறுபடியும் ஸ்ரீராமனிடம் வந்து சேர்ந்து "ஏ ராம! ஜகந்மாதாவான ஸீதை என்னுல் பார்க்கப் பட்டாள்" எனக்கூறினுர். (5)

जमदग्निः — ஜமதக்நி :—

रामो बद्धपयोनिधिः कपिवरैर्वीरैर्नलाद्यैर्वृतो
लङ्कां प्राप्य सकुम्भकर्णतनुजं हत्वा रणे रावणम् ।
तस्यां न्यस्य विभीषणं पुनरसौ सीतापतिः पुष्पका-
रूढः सन् पुरमागतः सभरतः सिंहासनस्थो बभौ ॥ 6

ராமோ ப3த்3த4பயோநிதி4: கபிவரைர்
வீரைர் நலாத்3யைர் வ்ருதோ
லங்காம் ப்ராப்ய ஸகும்ப4கர்ணதநுஜம்
ஹத்வா ரணே ராவணம் ।
தஸ்யாம் ந்யஸ்ய விபீ4ஷணம்
புநரஸௌ ஸீதாபதி: புஷ்பகா
ரூட4: ஸந் புரமாக3த: ஸப4ரத:
ஸிம்ஹாஸநஸ்தே2ா ப3பௌ4 ॥ 6

ஸ்ரீராமர், வீரர்களான நளன் முதலிய சிறந்த வானர்களால் சூழப்பட்டு, ஸமுத்திரதீரம் சென்று ஸமுத்திரத்திற்கு அணைபோட்டு, அதன்மூலம் இலங்கைக்குச் சென்று யுத்தத்தில் கும்பகர்ணன், இந்திரஜித் முதலியவர்களுள்பட இராவணனைக்கொன்று, அந்த இலங்கையில் விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்து, மறுபடியும் ஸீதாஸமேதராய் புஷ்பக விமானத்தில் ஏறிக்கொண்டு அயோத்திக்கு வந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டு ஸிம்ஹாஸநத்தில் அமர்ந்து பிரகாசித்தார். பரதன் இளவரசனுக ஆனுன். (6)

वसिष्ठः — வஸிஷ்டர் :—

श्रीरामो हयमेधमुख्यमखकृत् सम्यक् प्रजाः पालयन्
कृत्वा राज्यमथानुजैश्च सुचिरं भूरि स्वधर्मान्वितौ ।
पुत्रौ भ्रातृसमन्वितौ कुशलवौ संस्थाप्य भूमण्डले
सोऽयोध्यापुरवासिभिश्च सरयूस्नातः प्रपेदे दिवम् ॥ 7

ஸ்ரீராமோ ஹயமேத^{4}முக்^{2}யமக^{3}க்ருத்
ஸம்யக் ப்ரஜா: பாலயந்
க்ருத்வா ராஜ்யமத^2ாநுஜை: ச
ஸுசிரம் பூ^{4}ரி ஸ்வத^{4}ர்மாந்விதௌ ।
புத்ரௌ ப்^{4}ராத்ருஸமந்விதௌ
குச^{1}லவௌ ஸம்ஸ்த^2ாப்ய பூ^{4}மண்ட^{3}லே
ஸோऽயோத்^{4}யாபுரவாஸிபி^{4}: ச
ஸரயூஸ்நாத: ப்ரபேதே^{3} தி^{3}வம் ॥ 7

ஸ்ரீராமர் அச்வமேதம் முதலிய சிறந்த யாகங்களை செய்துகொண்டும், குடிகளை நன்ருக பரிபாலனம் செய்துகொண்டும், வெகுகாலம் வரை தம்பிகளுடன்கூட விசாலமான இராஜ்யத்தை பரிபாலனம் செய்துவிட்டு கடைசியில் ஸ்வதர்மத்தில் பற்றுள்ள தன் பிள்ளைகளான குசலவர்களை தன் சகோதரர்களின் பிள்ளைகளுடன்கூட ஆங்காங்கு

பூமண்டலத்தில் அரசர்களாக ஸ்தாபனம் செய்துவிட்டு, அயோத்யாவாஸிஜனங்களுடன் ஸரயூநதியில் ஸ்நாநம் செய்து வைகுண்டத்திற்குச் சென்றார். (7)

सर्वे ऋषयः — எல்லா ரிஷிகளும் :—

श्रीरामस्य कथासुधातिमधुरान् श्लोकानिमानुत्तमान्
ये शृण्वन्ति पठन्ति च प्रतिदिनं तेऽघौघविध्वंसिनः ।
श्रीमन्तो बहुपुत्रपौत्रसहिता भुक्त्वेह भोगांश्चिरं
भोगान्ते तु सदार्चितं सुरगणैर्विष्णोर्लभन्ते पदम् ॥ 8

ஸ்ரீராமஸ்ய கதா2ஸுதா4திமது4ராந்
ச்1லோகாநிமாநுத்தமாந்
யே ச்1ருண்வந்தி பட2ந்தி ச ப்ரதிதிநம்
தேऽகௌ4க4வித்4வம்ஸிநः ।
ஸ்ரீமந்தோ ப3ஹுபுத்ரபௌத்ரஸஹிதா
பு4க்த்வேஹ போ4கா3ம்ச்1சிரம்
போ4கா3ந்தே து ஸதா3ர்சிதம்
ஸுரக3ணைர் விஷ்ணோர்லப4ந்தே பத3ம் ॥ 8

ஸ்ரீ ராமருடைய அமிருதத்திற்கொப்பான கதையை வர்ணிப்பதால் மிக இனிமையான இச் சிறந்த சுலோகங்களை பிரதிதினம் எவர் படிக்கின்றனரோ, அல்லது கேட்கின்றனரோ, அவர்களுடைய பாவக் குவியல்கள் பறந்தோடும். ஸர்வைச்வர்ய ஸம்பந்நர்களாகி, பலபுத்ர பௌத்ரர்களுடன் கூட இந்த உலகில் வெகுகாலம்வரை பலவித ஸுக போகங்களை அநுபவித்து, கடைசியில் தேவர்களால் எப்பொழுதும் போற்றப்படும் ஸ்ரீவிஷ்ணுவின் ஸ்தாநமாகிய வைகுண்டத்தை அடைவார்கள். (8)

श्रीसीतारामस्तोत्रम् ॥

ஸ்ரீஸீதாராம ஸ்தோத்ரம்

अयोध्यापुरनेतारं मिथिलापुरनायिकाम् ।
इक्ष्वाकूणामलङ्कारं विदेहानामलङ्क्रियाम् ॥ 1

அயோத்4யாபு4ரநேதாரம்
மிதி2லாபுர நாயிகாம் ।
இக்ஷ்வாகூணமலங்காரம்
விதே3ஹா நாமலங்க்ரியாம் ॥ 1

(இதன் பொருள்) அயோத்யாபுரநாயகர் (ஸ்ரீராமர்) மிதிலாபுர நாயிகை (ஸீதை) இக்ஷ்வாகு வம்சத்தினரை அலங்கரிப்பவர் (ஸ்ரீராமர்) ஜனகவம்சத்தினர்களை அலங்கரிப்பவள் (ஸீதை). (1)

இதைப்போலவே பின்வரும் சுலோகங்களில் முதல் பாதம் ஸ்ரீராமரையும் இரண்டாம் பாதம் ஸீதையையும் குறிப்பிடும். "இருவர்களையும் வணங்கி கிருதார்த்தனுக ஆகின்றேன்" என ஒன்பதாவது சுலோகத்தில் இதுபூர்த்தியடைகின்றது.

रघूणां कुलदीपं च निमीनां कुलदीपिकाम् ।
सूर्यवंशसमुद्भूतं सोमवंशसमुद्भवाम् ॥ 2

ரகூ4ணம் குலதீ3பம் ச
நிமீநாம் குலதீ3பிகாம் ।
ஸூர்யவம்ச ஸமுத்பூ4தம்
ஸோமவம்சஸமுத்3ப4வாம் ॥ 2

(இ-ள்) இரகு குலத்தை தீபம்போல் விளங்க வைப்பவர். நிமிகுலத்தைப் பிரகாசப் படுத்தும் தீபம் போன்றவள். ஸூர்யவம்சத்தில் உதித்தவர். சந்திரவம்சத்தில் தோன்றியவள்.

पुत्रं दशरथस्यापि पुत्रीं जनकभूपतेः ।
वसिष्ठानुमताचारं शतानन्दमतानुगाम् ॥ 3

புத்ரம் த3சரத2ஸ்யாபி
புத்ரீம் ஜநகபூ4பதே: ।
வஸிஷ்ட2ாநுமதாசாரம்
ச1தாநந்த3மதாநுக3ாம் ॥ 3

(இ-ள்) தசரதருடைய புதல்வர். ஜனக மஹாராஜனுடைய புதல்வி. வஸிஷ்டருடைய உபதேசப்படி நடப்பவர். சதாநந்தருடைய மதத்தைப் பின்பற்றுகின்றவள். (3)

कौसल्यागर्भसंभूतं वेदिगर्भोदितां स्वयम् ।
पुण्डरीकविशालाक्षं स्फुरदिन्दीवरेक्षणाम् ॥ 4

கௌஸல்யாக3ர்ப4ஸம்பூ4தம்
வேதி3க3ர்பே4ாதி3தாம் ஸ்வயம் ।
புண்ட3ரீக விச1ாலாக்ஷம்
ஸ்பு2ரதி3ந்தீ3வரேக்ஷணாம் ॥ 4

(இ-ள்) கௌசல்யையின் கர்ப்பத்தில் தோன்றியவர். வேதியில் (யாகம் செய்வதற்காக உழப்பட்ட பூமியில்) தானாகத் தோன்றியவள். தாமரை புஷ்பம்போல் விசாலமான கண்களையுடைவர். மலர்ந்த இந்தீவரம்போன்ற கண்களையுடையவள்.

मत्तमातङ्गगमनं मत्तसारसगामिनीम् ।
तालीदलश्यामलाङ्गं तप्तचामीकरप्रभाम् ॥ 5

மத்தமாதங்க3க3மநம்
மத்தஸாரஸக3ாமிநீம் ।
தாளீத3ளச்1யாமளாங்க3ம்
தப்தசாமீகரப்ரப4ாம் ॥ 5

மத்தகஜம்போன்ற நடையுடையவர். மதம்பிடித்த ஸார ஸபக்ஷிபோன்ற நடையுடையவள். ஸ்ரீதாள தளம்போல் ச்யாமளமான உடலையுடையவர். உருக்கின தங்கம்போன்ற தேக காந்தியையுடையவள்.

चन्दनाद्रभुजामध्यं कुङ्कुमाक्तभुजान्तराम् ।
चापालङ्कृतहस्ताब्जं पद्मालङ्कृतपाणिकाम् ॥ 6

சந்த^{3} நார்த்^{3}ரபு^{4}ஜாமத்யம்
குங்குமாக்த பு^{3}ஜாந்தராம் ।
சாபாலங்க்ருத ஹஸ்தாப்^{4}ஜம்
பத்^{3}மாலங்க்ருதபாணிகாம் ॥ 6

(இ-ள்) சந்தனத்தால் நனைந்த மார்புடையவர். குங்கும த்ரவத்தை யணிந்த மார்பையுடையவள். வில்லினுல் அலங்கரிக்கப்பட்ட கையையுடையவர். தாமரை புஷ்பத்தால் அலங்கரிக்கப்பட்ட கையையுடையவள்.

सर्वलोकविधातारं सर्वलोकविधायिनीम् ।
लोकाभिरामं श्रीरामं अभिरामां च मैथिलीम् ॥ 7

ஸர்வலோக வித^{4}ாதாரம்
ஸர்வலோக வித^{4}ாயிநீம் ।
லோகாபி^{4}ராமம் ஸ்ரீராமம்
அபி^{4}ராமாம் ச மைதி^{2}லீம் ॥ 7

(இ-ள்) எல்லா உலகங்களையும் படைத்தவர். உலக மனைத்தையும் சிரிஷ்டித்தவள். உலகிலேயே அழகிய புருஷன் ஸ்ரீராமன். ரமணீயமான சுந்தரி மைதிலி.

दिव्यसिंहासनारूढं दिव्यस्रग्वस्त्रभूषणाम् ।
अनुक्षणं कटाक्षाभ्यामन्योन्येक्षणकांक्षिणौ ॥ 8

தி^{3}வ்யஸிம்ஹாஸநாரூட^{4}ம்
தி^{3}வ்யஸ்ரக்^{3}வஸ்த்ர பூ^{4}ஷணம் ।
அநுக்ஷணம் கடாக்ஷாப்^{4}யாம
ந்யோந்யேக்ஷண காங்க்ஷிணௌ ॥ 8

(இ-ள்) திவ்யஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பவர் ஸ்ரீராமர். திவ்யமான மாலை, வஸ்திரம், ஆபரணம் இவற்றை அணிந்திருப்பவள் ஸீதை. ஒவ்வொரு க்ஷணமும் ஒருவரையொருவர் கடைக்கண்ணால் பார்க்க விரும்புகின்றவர்கள்.

अन्योन्यसदृशावेतौ त्रैलोक्यगृहदंपती ।
इमौ युवां प्रणम्याहं भजाम्यधिकृतार्थताम् ॥ 9

அந்யோந்யஸத்^{3}ருசா^{1}வேதௌ
த்ரைலோக்யக்^{3}ருஹத^{3}ம்பதீ ।
இமௌ யுவாம் ப்ரணம்யாஹம்
ப^{4}ஜாம்யதி^{4} க்ருதார்த^{2} தாம் ॥ 9

(இ-ள்) மூவுலகங்களாகிற கிருஹத்தில் தம்பதிகளாக விளங்கும் தாங்கள் எல்லா அம்சங்களிலும் ஒருவரையொருவர் ஒத்திருப்பவர்கள். இப்படிப்பட்ட தங்கள் இருவரையும் வணங்கி நான் கிருதார்த்தனாக ஆகின்றேன்.

अनया स्तौति यः स्तुत्या रामं सीतां च भक्तितः ।
तस्य तौ तनुतां प्रीतौ संपदः सकला अपि ॥ 10

அநயா ஸ்தௌதி ய: ஸ்துத்யா
ராம் ஸீதாம் ச ப^{4}க்தித: ।
தஸ்ய தௌ தநுதாம் ப்ரீதௌ
ஸம்பத^{3}: ஸகலா அபி ॥ 10

(இ-ள்) எவர் இந்த ஸ்தோத்ரத்தில் பக்தியுடன் இராமனையும் ஸீதையையும் துதிக்கின்றனரோ, அவர்களுக்கு (ஸ்தோத்ரத்தால்) பிரீதியடைந்த ஸ்ரீராமனும் ஸீதையும் எல்லா ஸம்பத்துக்களையுமளிக்கின்றனர்.

इतीदं रामचन्द्रस्य जानक्याश्च विशेषतः ।
कृतं हनूमता पुण्यं स्तोत्रं सद्यो विमुक्तिदम् ॥
यः पठेत् प्रातरुत्थाय सर्वान् कामानवाप्नुयात् ॥ 11

இதீத^{3}ம் ராமசந்த்^{3}ரஸ்ய
ஜாநக்யா: ச விசே^{1}ஷத: ।
க்ருதம் ஹநூமதா புண்யம்
ஸ்தோத்ரம் ஸத்^{3}யோ விமுக்தித^{3}ம் ॥
ய: படே^{2}த் ப்ராதருத்த^{2}ாய ।
ஸர்வாந் காமாநவாப்நுயாத் ॥ 11

(இ-ள்) இராமசந்திரனையும் ஸீதையையும் குறித்து ஹநுமானால் இயற்றப்பட்ட, விரைவில் புண்யத்தையும் முக்தியையும் அளிக்கக்கூடிய, இந்த ஸ்தோத்ரத்தை எவர் காலையில் எழுந்திருந்து படிக்கின்றனரோ. அவர்கள் விரும்பிய பயன்களையெல்லாம் அடைவார்கள்.

य इदं पठति स्तोत्रं मैथिलीरामचन्द्रयोः ।
श्रीवैकुण्ठमवाप्नोति स नरो हतकिल्बिषः ॥ 12

ய இத^{3}ம் பட^{2}தி ஸ்தோத்ரம்
மைதி^{2}லீ ராமசந்த்^{3}ரயோ: ।
ஸ்ரீவைகுண்ட^{2}மவாப்நோதி
ஸ நரோ ஹதகில்பி^{3}ஷ: ॥ 12

(இ-ள்) இந்த ஸீதாராமசந்திர ஸ்தோத்ரத்தை எவர் படிக்கின்றனரோ, அவர்கள் பாவமற்றவர்களாக ஆகி ஸ்ரீவைகுண்டத்தை அடைகின்றனர்.

(குறிப்பு) சிலர் அடியிற் கண்டவற்றையும் இந்த ஸ்தோத்ரத்தில் சேர்ந்ததாகக் கருதுகின்றனர். அப்படியானால் ஏழாவது சுலோகத்திற்குப் பின் இவற்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

चन्द्रकान्ताननाम्भोजं चन्द्रबिम्बोपमाननाम् ।
शरणागतगोप्तारं प्रणिपातप्रसादिकाम् ॥
कालमेघनिभं रामं कार्तस्वरसमप्रभाम् ॥ 13

சந்த்3ரகாந்தாநநாம்பே4ாஜம்
சந்த்3ரபி3ம்பே3ாபமாநநாம் ।
ச1ரணாக3தகோப்தாரம்
ப்ரணிபாதப்ரஸாதி3காம் ॥
காலமேக4நிப4ம் ராமம்
கார்த்தஸ்வரஸமப்ரப4ாம் ॥ 13

(இ-ள்) சந்திரன்போல் அழகிய முகத்தையுடையவர். சந்திரபிம்பத்திற்கொப்பான முகத்தையுடையவள். சரணமடைந்தவர்களை இரக்ஷிப்பவர், நமஸ்காரத்தால்மட்டும் அருள்புரிகின்றவள். நீருண்ட மேகத்திற்கொப்பான உடலையுடையவர் இராமர். சுவர்ணத்திற்கொப்பான காந்தியையுடையவள் சீதை.

श्रीरामचन्द्रस्तुतिः ॥

ஸ்ரீ ராமசந்த்ர ஸ்துதி

ஸ்ரீ ராமசந்த்ர வராஷ்டகம்

श्रीशिव उवाच — ஸ்ரீசிவன் சொல்லுகிறார் ,—

सुग्रीवमित्रं परमं पवित्रं
सीताकलत्रं नवमेघगात्रम् ।
कारुण्यपात्रं शतपत्रनेत्रं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 1

ஸுக்[3]ரீவமித்ரம் பரமம் பவித்ரம்
ஸீதாகலத்ரம் நவமேக[4]க[3]াத்ரம் ।
காருண்யபாத்ரம் ச[1]தபத்ரநேத்ரம்
ஸ்ரீராமசந்த்[3]ரம் ஸததம் நமாமி ॥ 1

[இது ஸ்ரீராமபட்டாபிஷேககாலத்தில் ஸ்ரீ பரமேச்வரன் ஸ்ரீராமனைக் குறித்து செய்த ஸ்தோத்ரம். இதற்கு ஸ்ரீராம சந்த்ர வராஷ்டகம் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இது ஆனந்த ராமாயணத்திலிருந்து எடுக்கப்பட்டது]

(இ-ள்.) சுக்ரீவனுக்கு நண்பராயும், மிகபரிசுத்தராயும், ஸீதையை பார்யையாகப் பெற்றவரும், நீருண்டமேகம் போன்ற உடலையுடையவரும், கருணைக்கடலாயும், தாமரைப் புஷ்பம்போன்ற நேத்ரங்களையுடையவருமான ஸ்ரீராமசந்த்ரனை எப்பொழுதும் வணங்குகிறேன். (1)

संसारपारं निगमप्रचारं
धर्मावतारं हृतभूमिभारम् ।
सदाऽविकारं सुखसिन्धुसारं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 2

ஸம்ஸாரபாரம் நிக3மப்ரசாரம்
த4ர்மாவதாரம் ஹ்ருதபூ4மிபா4ரம் |
ஸதா3ऽவிகாரம் ஸுக2ஸிந்துஸாரம்
ஸ்ரீராமசந்த்3ரம் ஸ்ததம் நமாமி || 2

(இ-ள்) ஸம்ஸாரத்திற்கு அப்பால்பட்டவரும், வேதத்தை பிரசாரம் செய்கின்றவரும், அல்லது வேதங்களில் சஞ்சரிக்கின்றவரும் (அதாவது வேதங்களால் மட்டும் அறியத் தகுந்தவரும்) தர்மத்தின் அவதாரமாயும், பூ பாரத்தை அகற்றியவரும், எப்பொழுதும் எவ்வித விகாரமுமற்றவரும், ஆனந்தக்கடலாயுமிருக்கின்ற ஸ்ரீராமசந்த்ரனை எப்பொழுதும் வணங்குகிறேன். (2)

लक्ष्मीनिवासं जगतां निवासं
लङ्काविनाशं भुवनप्रकाशम् ।
भूदेववासं शरदिन्दुहासं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 3

லக்ஷ்மீவிலாஸம் ஜக3தாம் நிவாஸம்
லங்காவிநாச1ம் பு4வநப்ரகாச1ம் |
பூ4தேவவாஸம் ச1ரதி3ந்து3ஹாஸம்
ஸ்ரீராமசந்த்3ரம் ஸததம் நமாமி || 3

(இ-ள்) ஸ்ரீ லக்ஷ்மீகாந்தனும், ஜகத்திற்கெல்லாம் இருப்பிடமாயும், இலங்கையை அழித்தவரும், எல்லா உலகங்களிலும் மிகவும் பிரகாசிப்பவரும், அந்தணர்களிடம் வஸிப்பவரும், சரத்காலசந்திரன்போன்ற மந்தஹாஸத்தையுடையவருமான ஸ்ரீராமசந்த்ரனை எப்பொழுதும் வணங்குகிறேன், (3)

मन्दारमालं वचने रसालं
गुणैर्विशालं हतसप्तसालम् ।
क्रव्यादकालं सुरलोकपालं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 4

மந்த3ாரமாலம் வசநே ரஸாலம்
கு3ணைர் விச1ாலம் ஹதஸப்தஸாலம்।
க்ரவ்யாத3காலம் ஸுரலோகபாலம்
ஸ்ரீராமசந்த்3ரம் ஸததம் நமாமி॥ 4

(இ-ள்) மந்தார மலர்மாலையையணிந்தவரும், மாங்கனி போல் இனிய வார்த்தைகளைப் பேசுகின்றவரும், பல நற்குணங்களுடன் கூடியவரும், "ஸாலம்" என்ற ஏழு மரங்களைப் பிளந்தவரும், இராக்ஷஸர்களுக்கு யமன் போன்றவரும், தேவலோகத்தைக் காப்பவருமான ஸ்ரீ ராமசந்த்ரனை எப்பொழுதும் வணங்குகிறேன். (4)

वेदान्तगानं सकलैस्समानं
हतारिमानं त्रिदशप्रधानम् ।
गजेन्द्रयानं विगतावसानं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 5

வேதாந்தக3ாநம் ஸகலைஸ்ஸமாநம்
ஹதாரிமாநம் த்ரிதச1ப்ரத4ாநம்।
க3ஜேந்த்3ரயாநம் விக3தாவஸாநம்
ஸ்ரீராமசந்த்3ரம் ஸததம் நமாமி॥ 5

(இ-ள்) வேதாந்தங்களால் கொண்டாடப்பட்டவரும், அனைவருடனும் ஸமமாகப் பழகுகின்றவரும், எதிரிகளின் கர்வத்தை அழித்தவரும், தேவர்களுள் மிகச் சிறந்தவராயும், யானைபோல் அழகிய நடையையுடையவரும், அழிவற்றவருமான ஸ்ரீராமசந்த்ரனை எப்பொழுதும் வணங்குகின்றேன். (5)

श्यामाभिरामं नयनाभिरामं
गुणाभिरामं वचनाभिरामम् ।
विश्वप्रणामं कृतभक्तकामं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 6

ச்1யாமாபி4ராமம் நயநாபி4ராமம்
கு3ணாபி4ராமம் வசநாபி4ராமம்।
விச்1வப்ரணாமம் க்ருதப4க்தகாமம்
ஸ்ரீராமசந்த்3ரம் ஸததம் நமாமி॥ 6

(இ-ள்) சியாமளவர்ணம், அழகிய கண்கள், உயர்ந்த குணங்கள், இனிய சொற்கள் இவை எல்லாவற்ருலும் மிகவும் ரமணீயராயும், அனைவராலும் வணங்கப் படுகின்றவரும், பக்தர்களின் இஷ்டங்களை பூர்த்தி செய்கின்றவருமான ஸ்ரீராமசந்திரனை எப்பொழுதும் வணங்குகின்றேன். (6)

लीलाशरीरं रणरङ्गधीरं
विश्वैकसारं रघुवंशहारम् ।
गम्भीरनादं जितसर्ववादं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 7

லீலாச1ரீரம் ரணரங்க3தீ4ரம்
விச்1வைகஸாரம் ரகு4வம்ச1ஹாரம்।
க3ம்பீ4ரநாத3ம் ஜிதஸர்வவாத3ம்
ஸ்ரீராமசந்த்3ரம் ஸததம் நமாமி॥ 7

(இ-ள்) (உண்மையில் ஜனனமரணமற்றவராளுலும்) உலகில் பலவித க்ரீடைகளைச் செய்வதற்கென்று தாமாகவே மானிட உடலை ஏற்றுக்கொண்டவரும், போர்க்களத்தில் மிகவும் தீரராயும், உலகிலேயே மிகச் சிறந்தவராயும், இரகு

வம்சத்திற்கு மாலை போன்றவரும் (மாலைபோல் இரகு வம்சத்தை அலங்கரிப்பவரும்) கம்பீரமான த்வனியையுடையவரும், எல்லாவித வாதங்களிலும் (உண்மையை அறிவதற்கென கக்ஷிப்ரதிகக்ஷிகளை எடுத்துரைப்பதில்) வெற்றிகண்டவருமான ஸ்ரீராமசந்த்ரனை எப்பொழுதும் வணங்குகின்றேன். (7)

खले कृतान्तं स्वजने विनीतं
सामोपगीतं मनसा प्रतीतम् ।
रागेण गीतं वचनादतीतं
श्रीरामचन्द्रं सततं नमामि ॥ 8

க²லே க்ருதாந்தம் ஸ்வஜநே விநீதம்
ஸாமோபகீ³தம் மநஸா ப்ரதீதம் ।
ராகே³ண கீ³தம் வசநாத³தீதம்
ஸ்ரீராமசந்த்³ரம் ஸததம் நமாமி ॥ 8

(இ-ள்) துஷ்டர்களிடம் யமன் போன்றவரும், தம்மைச் சேர்ந்தவர்களிடம் மிக வணக்கமுள்ளவரும், ஸாமவேதத்தால் கொண்டாடப்பட்டவரும், வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத பரப்ரும்மஸ்வரூபமாகவும், அல்லது வாக் முதலிய மற்ற இந்திரியங்களுக்கு எட்டாதவரும், பரிசுத்தமான மனதால்மட்டும் அறியத் தகுந்தவரும், (அனைவராலும்) மிகப் பிரியத்துடன் போற்றப்பட்டவருமான ஸ்ரீராமசந்த்ரனை எப்பொழுதும் போற்றுகின்றேன். (8)

श्रीरामचन्द्रस्य वराष्टकं त्वां
मयेरितं देवि मनोहरं ये ।
पठन्ति शृण्वन्ति गृणन्ति भक्त्या
ते स्वीयकामान् प्रलभन्ति नित्यम् ॥ 9

ஸ்ரீராமசந்த்3ரஸ்ய வராஷ்டகம் த்வாம்
மயேரிதம் தே3வி மநோஹரம் யே ।
பட2ந்தி ச்1ருண்வந்தி க்3ருணந்தி ப4க்த்யா
தே ஸ்வீயகாமாந் ப்ரலப4ந்தி நித்யம் ॥ 9

(இ-ள்) ஏதேவி பார்வதி! ஸ்ரீராமசந்த்ரனைப் புகழும் "வராஷ்டகம்" என்ற இந்த இனிமையான ஸ்தோத்ரம் உன்னைக் குறித்து என்னால் கூறப்பட்டது. இதை எவர் பிரதி தினம் பக்தியுடன் படிக்கின்றனரோ, கேட்கின்றனரோ அல்லது பிறருக்குச் சொல்லுகின்றனரோ அவர்கள் தம் தம் அபீஷ்டங்களையெல்லாம் விசேஷமாக அடைகின்றனர். (9)

[பின்வரும் ஐந்து சுலோகங்கள் அத்யாத்ம ராமாயணத்திலிருந்து எடுக்கப்பட்டவை. அவற்றுள் 1, 2 சுலோகங்கள் அஹல்யையால் செய்யப்பட்ட ஸ்ரீராமசந்த்ர ஸ்துதியில் உள்ளவை. 3, 4 சுலோகங்கள் ஜடாயு செய்த ஸ்துதியில் உள்ளவை. 5. இந்திரன் செய்த ஸ்துதியில் உள்ளது.]

यत्पादपङ्कजरजः श्रुतिभिर्विमृग्यं
यन्नाभिपङ्कजभवः कमलासनश्च ।
यन्नामसाररसिको भगवान् पुरारिः
तं रामचन्द्रमनिशं हृदि भावयामि ॥ 1

யத்பாத3பங்கஜரஜ: ச்1ருதிபி4ர்விம்ருக்3யம்
யந்நாபி4பங்கஜப4வ: கமலாஸநச்1ச ।
யந்நாமஸாரரஸிகோ ப4க3வாந் புராரி:
தம் ராமசந்த்3ரமநிச1ம் ஹ்ருதி3 பா4வயாமி ॥

(இ-ள்) எவருடைய திருவடித்தாமரையின் தூளிகள் வேதங்களால் தேடப்படுகின்றனவோ, எவருடைய நாபீகமலத்தில் பிருஹ்மா தோன்றினாரோ, எவருடைய நாமாம்ருதத்தில் பகவான் பரமேச்வரன் ரஸித்துக்கொண்டிருக்கிறாரோ, அப்படிப்பட்ட ராமசந்த்ரனை எப்பொழுதும் மனதில் த்யானம் செய்கின்றேன். (1)

भवभयहरमेकं भानुकोटिप्रकाशं
करधृतशरचापं कालमेघावभासम् ।
कनकरुचिरवस्त्रं रत्नवत्कुण्डलाढ्यं
कमलविशदनेत्रं सानुजं राममीडे ॥ 2

ப4வப4யஹரமேகம் ப4ாநுகோடிப்ரகாச1ம்
கரத்4ருதச1ரசாபம் காலமேக4ாவப4ாஸம் |
கநகருசிரவஸ்த்ரம் ரத்நவத்குண்ட3லாட்4யம்
கமலவிச1த3நேத்ரம் ஸாநுஜம் ராமமீடே3 ||

(இ-ள்) ஸம்ஸார பயத்தை அழிக்கும் ஒரே தெய்வமாயும், கோடி சூர்ய ப்ரகாசராயும், வில்லையும் அம்பையும் கையில் தரித்துக்கொண்டிருப்பவரும், நீருண்ட மேகம் போல் விளங்குகின்றவரும், ஸுவர்ணம்போல் அழகிய பீதாம்பரத்தை அணிந்தவரும், இரத்தினங்கள் இழைத்த குண்டலங்களை யணிந்தவரும், தாமரைப் புஷ்பம்போல் ஸ்வச்சமான கண்களையுடையவரும் இலக்ஷ்மணனுடன் சேர்ந்திருப்பவருமான ஸ்ரீராமனைப் போற்றுகின்றேன். (2)

भवविपिनदवाग्निनामधेयं
भवमुखदैवतदैवतं दयालुम् ।
दनुजपतिसहस्रकोटिनाशं
रवितनयासदृशं हरिं प्रपद्ये । 3

ப4வவிபிநத3வாக்நிநாமதே4யம்
ப4வமுக2தை3வததை3வதம் த3யாலும் |
த3நுஜபதிஸஹஸ்ரகோடிநாச1ம்
ரவிதநயாஸத்3ருச1ம் ஹரிம் ப்ரபத்3யே || 3

(இ-ள்) ஸம்ஸாரமென்ற காட்டை அழிப்பதில் காட்டுத் தீபோன்ற நாமதேயத்தை யுடையவரும், மஹேச்வரன் முதலிய தேவர்களெல்லாம் பூஜிக்கத்தகுந்த தெய்வமாயும், கோடிக்கணக்கான அரக்கர்களை அழித்தவராயும், யமுனா ஜலம்போல் ச்யாமள வர்ணத்துடன் விளங்குகின்றவருமான ஸ்ரீஹரியை (ஸ்ரீராமனை) சரணமடைகின்றேன். (3)

परधनपरदारवर्जितानां
परगुणभूतिषु तुष्टमानसानाम् ।
परहितनिरतात्मनां सुसेव्यं
रघुवरमम्बुजलोचनं प्रपद्ये ॥ 4

பரத^{4}நபரத^{3}ாரவர்ஜிதாநாம்
பரகு^{3}ணபூ^{4}திஷு துஷ்டமாநஸாநாம் ।
பரஹிதநிரதாத்மநாம் ஸுஸேவ்யம்
ரகு^{4}வரமம்பு^{3}ஜலோசநம் ப்ரபத்^{3}யே ॥ 4

(இ-ள்) பிறர் பொருள், ஸ்திரீ இவற்றில் அறவே ஆசையற்றவர்களும், பிறருடைய குணங்கள், ஐச்வர்யங்கள் இவற்றைக் கண்டு ஸந்தோஷப்படுகின்றவர்களும், பிறருடைய நன்மையில் எப்பொழுதும் ஈடுபடுகின்றவர்களுமான மஹான்களால் நன்கு ஸேவிக்கத்தக்கவரும், தாமரைப் புஷ்பம்போன்ற நேத்திரத்தையுடையவருமான இரகுநாதனை சரணமடைகின்றேன். (4)

भजेऽहं सदा राममिन्दीवराभं
भवारण्यदावानलाभाभिधानम् ।
भवानीहृदा भावितानन्दरूपं
भवाभावरूपं भवादिप्रपन्नम् ॥ 5

ப4ஜேஹம் ஸத3ா ராமமிந்தீ3வராப4ம்
ப4வாரண்யத3ாவாநலாப4ாபி4த4ாநம் |
ப4வாநீஹ்ருத3ா ப4ாவிதாநந்த3ரூபம்
ப4வாப4ாவரூபம் ப4வாதி3ப்ரபந்நம் || 5

(இ-ள்) இந்தீவர புஷ்பம்போல் பிரகாசிப்பவரும், ஸம்ஸாரமாகிற காட்டிற்கு காட்டுத்தீ போன்ற நாமதேயத்தையுடையவரும், பார்வதியால் ஆனந்த ஸ்வரூபமாக த்யானம் செய்யப்பட்டவரும், ஜனனம்-மரணம் முதலிய பந்தமற்றவரும், பரமேச்வரன் முதலிய தேவர்களால் ஆச்ரயிக்கப்படுகின்றவருமான ஸ்ரீராமனை எப்பொழுதும் நான் பஜனம் செய்கின்றேன். (5)

पवित्रं चरित्रं विचित्रं त्वदीयं
नरा ये स्मरन्त्यन्वहं रामचन्द्र ।
भवन्तं भवान्तं भरन्तं भजन्तो
लभन्ते कृतान्तं न पश्यन्त्यतोऽन्ते ॥ 6

பவித்ரம் சரித்ரம் விசித்ரம் த்வதீ3யம்
நரா யே ஸ்மரந்த்யந்வஹம் ராமசந்த்3ர |
ப4வந்தம் ப4வாந்தம் ப4ரந்தம் ப3ஜந்தோ
லப4ந்தே க்ருதாந்தம் ந பச்1யந்த்யதோந்தே ||

(இ-ள்) ஏ ராமசந்த்ர ! எவர் விசித்ரமாயும், பாவநமாயுமுள்ள தங்களது சரித்திரத்தை பிரதி தினம் ஸ்மரிக்கின்றனரோ, அவர்கள் மோக்ஷத்தையளிக்கும் தங்களையே அடைகின்றனர். இறுதியில் யமனைக்காணவே மாட்டார்கள்.

(இது ஸ்ரீ ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்ரீராமபுஜங்க ஸ்தோத்ரத்திலிருந்து எடுக்கப்பட்டது).

रामस्सीतासमेतो निवसतु हृदये सानुजं राममीडे
रामेण क्षीणपापस्त्रिविधमपि कृतं कर्म रामाय दद्याम् ।
रामादन्यं न जाने न हि किमपि वचो रामनाम्नस्समानं
रामे पश्यामि विश्वं भुवनमनुदिनं पाहि मां वीरराम ॥

ராமஸ்ஸீதாஸமேதோ நிவஸது ஹ்ருத3யே
ஸாநுஜம் ராமமீடே3
ராமேண க்ஷீணபாபஸ்த்ரிவித4மபி க்ருதம்
கர்ம ராமாய த3த்3யாம்।
ராமாத3ந்யம் ந ஜாநே ந ஹி கிமபி வசோ
ராமநாம்நஸ்ஸமாநம்
ராமே பச்1யாமி விச்1வம் பு4வநமநுதி3நம்
பாஹி மாம் வீரராம॥ 1

ஸ்ரீராமன் ஸீதையுடன்கூட எனது ஹ்ருதயத்தில் எப்பொழுதும் வாஸம் செய்யட்டும். சஹோதரர்களுடன் கூடிய ஸ்ரீராமனை நான் துதிக்கிறேன். ஸ்ரீராமனுல் (ஸ்ரீராம த்யானத்தால்) என்னுடைய பாபங்கள் எல்லாம் அழிந்து விட்டன. என்னுல் செய்யப்படும் காயிகம், வாசிகம் மானஸிகம் என்ற மூவகைக் கர்மாக்களையும் ஸ்ரீராமன் பொருட்டே அர்ப்பணம் செய்கிறேன். ஸ்ரீராமனைத் தவிர வேறு யாரையும் நான் அறியேன். ஸ்ரீராமநாமாவுக்குச் சமமான வார்த்தை எதுவுமில்லை. இவ்வுலகம் முழுவதையும் ஸ்ரீராமனிடமே நான் காண்கின்றேன். ஹே! ராமா! என்னை எப்பொழுதும் காத்தருளவேண்டும்.

இச்சுலோகத்தில் ஸ்ரீராமனை எட்டு விபக்திகளாலும் குறிப்பிட்டுப் போற்றுகிறுர் என்பது குறிப்பிடத்தக்கது. (1)

विमलकमलनेत्रं विस्फुरन्नीलगात्रं
तपनकुलपवित्रं दानवध्वान्तमित्रम् ।
भुवनशुभचरित्रं भूमिपुत्रीकलत्रं
दशरथवरपुत्रं नौमि रामाख्यमित्रम् ॥ 2

விமலகமலநேத்ரம் விஸ்பு[2]ரந்நீலக[3]ாத்ரம்
தபநகுலபவித்ரம் த[3]ாநவத்[4]வாந்தமித்ரம் ।
பு[4]வநசு[1]பசரித்ரம் பூ[4]மிபுத்ரீகலத்ரம்
த[3]ச[1]ரத[2]வரபுத்ரம் நௌமி ராமாக்[2]யமித்ரம் ॥

நிர்மலமான தாமரைபோன்ற நேத்திரத்தை உடையவரும், நீலமாகப் பிரகாசிக்கும் காத்திரத்தைப் பெற்றவரும், சூர்யகுல பவித்ரராயும், சூர்யகுலத்தை சுத்தம் செய்கின்றவராயும், அசுரர்களாகிற இருளுக்கு மித்ரன் (சூர்யன்) போன்றவரும், உலகங்களுக்கெல்லாம் மங்களகரமான சரித்திரத்தையுடையவரும், பூமிபுத்ரியை (ஸீதையை) களத்ரமாக (மணவியாக)ப் பெற்றவரும், தசரதரின் சிறந்த புத்ரருமான ஸ்ரீராமன் என்று பெயர் பெற்ற மித்ரனை (எல்லா உலகங்களுக்கும் தோழனை) வணங்குகிறேன். (2)

माता रामो मत्पिता रामचन्द्रो
भ्राता रामो मत्सखा राघवेशः ।
सर्वस्वं मे रामचन्द्रो दयालुः
नान्यत् दैवं नैव जाने न जाने ॥ 3

